1978 ஏப்ரல் 1]

*17. குறுகியகால வினு—

அருமனை உயர்நிலைப்பள்ளி

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அருமனை தனியார் உயர்நிலைப் பள்ளியில் 6 முதல் 11 வரை உள்ள வகுப்புகளில் தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் எத்தனை ? மலையாளத்தைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் எத்தனை ?

(ஆ) அங்கு பணியாற்றும் ஆசிரியர்களில் அரசினரால் சான்றிதழ் பெற்று தமிழில் பாடம் நடத்தும் ஆசிரியர் எத்தனை பேர் ? மலையாளத்தில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் எத்தனை பேர் ?

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு தேர்வுகளில் (எஸ். எஸ். எல். சி.) தமிழ் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விழுக்காடு எத்தனை ? மலையாள வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விழுக்காடு எத்தனை ?

(ஈ) தமிழ் வகுப்புகளில் தேர்வு பலன் குறைந்து இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் 16 ; மலையாளத்தைப் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் 6.

(ஆ) தமிழ் : 11—மலையாளம்: 11

(இ) தமிழ் மற்றும் மலையாளப் பிரிவுகளில் பன்னிக்கல்வி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் விழுக்காடு பின்வருமாறு :

| ஆண்டு | தமிழ்ப் பிரிவு | மலையாளப் பிரிவு |
|---|---|---|
| 1975 | 39% | 63% |
| 1976 | 67% | 78% |
| 1977 | 39% | 52% |

(ஈ) தமிழ் வகுப்புகளில் கல்வி பயின்று வந்த மாணவர்களின் தரமே குறைந்த தேர்வு பலனுக்குக் காரணம். இது 1976 ஆம் ஆண்டு தேர்வு விழுக்காடை கருத்தில் கொள்ளும்பொழுது தெளிவாகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தமிழ் மாணவர்களின் தரம் குறைவு என்று அமைச்சா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விடையில், 16 தமிழ் வகுப்புகளுக்கு 11 தமிழ் ஆசிரியர்களும், அறு மலையாள வகுப்புகளுக்கு 11 ஆசிரியர்களும் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆக, தமிழ் வகுப்புகளை மலையாள ஆசிரியர்கள்தான் நடத்துகிறார்கள் என்பது இந்த விடையிலிருந்து தெளிவாகிறது. ஆகவே இந்த ரிசல்ட்ஸ் குறைவாகக் காணப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே இனிமேல் தமிழ் வகுப்புகளை தமிழ் ஆசிரியர்கள் தான் எடுக்க வேண்டும் என்ற விதிமுறையைக் கட்டாயமாக அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு அது குறித்து பரிசீலிக்கும்.

திரு. எம். வின்சென்ட்: கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அருமனை தனியார் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியரின் வீட்டுக்குப் போய்தான் ஆசிரியர்கள் சம்பளம் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த ஆசிரியர்களுக்குப் பள்ளிக்கூடத்திலே சம்பளம் கொடுக்க அரசு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் பள்ளியிலேதான் சம்பளம் வாங்குவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## நீரூற்றுகள் குறித்த ஆய்வு

* 749 வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விண்கூடுகள் எடுத்த புகைப்படங்களின் உதவியால் தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் நீரூற்றுகள் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விண்கூடுகளும், விமானங்களும் எடுத்த புகைப்படங்களின் உதவியால் தமிழகமெங்கும் நீரூற்றுகள் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவதாக வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் தர்மபுரி மாவட்டத்தில் நீரூற்றுகள் கண்டுபிடிப்பதற்காக தீவிர சோதனைகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.